--

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண். 165/2022**

பெயர்– திரு.சரவணன் நாள்.22.01.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி –**

நான் வழக்குரை பத்தி –6–ல் தாவா சொத்திற்குள்தான் வீடு கட்டியுள்ளதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். வீட்டின் நீள, அகலம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். சன்சைடு மற்றும் பைப்லைனின் நீள, அகலங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.வா.சா.ஆ.8 புகைப்படத்தின் 65–பி சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.8 புகைப்படம் மோசடியாக உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் என்னை எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றாலும், நான் பொய்யாக பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.01.22 16:28:51 +0530

District Munsif